## அவசர கூட்ட நிகழ்ச்சி நிரல்

**கூடலூர் நகராட்சியில் நவம்பர் மாதம் (18.11.2021) ஆம் நாள் வியாழன்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

கூடலூர் நகராட்சி பகுதியில் உள்ள முல்லைப்பெரியாறு பகுதியிலிருந்து மதுரை மாநகருக்கு 125 மில்லியின் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டம் மதுரை மாநகராட்சியின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.மேற்படி திட்டத்திற்கு 18 ஆம் கால்வாய் தடுப்பணைக்கு கீழ் தலைமை பணியிடத்தில் தடுப்பனை கட்ட தேர்வு செய்யபட்டதை வண்ணாம் படித்துறைக்கு மாற்றம் செய்துள்ளதை தொடர்ந்து,மேற்படி பகுதியிலிருந்து மதுரை மாநகராட்சி குடிநீர் பயன்பாட்டிற்கு தண்ணீர் கொண்டு செல்வதற்கு ஆணையாளர் (ம) தனி அலுவலர் மதுரை மாநகராட்சி அவர்களின் **11.11.2021**ம் தேதிய கடித எண். NMAPQ.2(AMRUIT)MULLAI PERIYAR WATER SUPPLY SCHEME PACKAGE.1 கடிதம் வரப்பட்டதின் அடிப்படையில் நகராட்சியின் தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலர் குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்**

**தீர்மான எண்.1250,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.2**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**1212** நாள்.**31.08.2021** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **07.09.2021** ஆம் நாள் குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | நிறுவனத்தாரரின் பெயர் | விலைப்புள்ளி தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள சாலைகள், மழைநீர் வடிகால் விபரங்குலூ ,21 வார்டுகளில் உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள், தெருவிளக்குகள், சிறுபாலங்கள், நடைபாதைகள், கழிவறை விபரங்கள் ஆகியவை குறித்த பதிவேடு மற்றும் வரைபடம் தயார் செய்யும் பணி | 10.00 | M/s Mahendhiran Consultancy Services Kanchipuram | 9,96,674/- |
| | | | RBA Infotech Chennai | 13,09,800/- |
| | | | ATHIRA GEO SPATIAL SERVICES PVT LTD, Chennai | 15,04,500/- |

**அலுவலகக் குறிப்பு : –** 1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட ரூ. **9,96,674/-** குறைவான விலைப்புள்ளி தொகை கொடுத்துள்ள M/s Mahendhiran Consultancy Services அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**2.**அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1251,அனுமதிக்கப்பட்டது**